27-6-1991


# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 117 இதழ் : 10 21–06–1991 (யூன். 21— யூலை. 05) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு. விலை ரூபா 3-50


### பாராட்டு

பம்பாயில் யேசுசபையின் 450 வது ஆண்டுவிழாவில் இந்தியாவுக்கான பிரத்தானிய உயர் ஸ்தானிகர் சேர் டேவிட் கூடல் கலந்து கொண்டு தாம் கத்தோலிக்க பொதுநிலையினராக இருப்பதையிட்டு பெருமைப்பட்டார். தாம் கல்விகற்ற கத்தோலிக்க கல்வி நிறுவனங்களைப் பெரிதும் பாராட்டினார்.

### அருள்திரு பயஸ் பத்மராஜா அடிகள் கொழும்பு பேராயருக்குப் புகழாரம்

# பேராயரின் திருகோணமலை விஜயம்

# மக்களுக்குப் பேராறுதல் அளித்தது

சென்ற மாதம் 5ஆம் திகதி கொழும்பு மறைமாவட்ட பேராயர் திருமலைக்கு விஜயம் செய்து தூய தமிழில் மக்களுடன் பேசினார். பேராலய பங்குத்தந்தை, "இன்னலுற்ற கிழக்கிலங்கை மக்களைப் பேராயர் தரிசிக்க வந்தது ஆறுதல் அளிக்கிறது" என்றார்.

திருமலை–மட்டுநகர் ஆயர் பேரருள்திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையின் அழைப்பை ஏற்று கொழும்பு மறைமாவட்ட பேராயர் பேரருள்திரு. நிக்கிலஸ் மாக்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை கிழக்கிலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார்.

இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு அகதிமுகாம்களில் தங்கியிருந்த ஏராளமான மக்களைத் தரிசித்து ஆறுதல் கூறிய பேராயர் திருப்பலியின் போது தூய தமிழில் மறையுரை ஆற்றினார்.

பேராயரை வரவேற்று உரையாற்றிய புனித மரியாள் இணைப் பேராலயம் பங்குத்தந்தை அருள்திரு. பயஸ் பத்மராஜா "தென்பகுதி ஆயர், எமது மக்களைத் தரிசிக்க வந்தது மக்களுக்கு ஆறுதல் அளிக்கிறது" என்றார்.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)



## அன்னை திரேசாவுக்கு கௌரவம்

பாரதீய வித்தியா பவனின் கௌரவ அங்கத்தினராகும் இரண்டாவது நோபல் பரிசாளர் என்ற மதிப்பு அன்னை திரேசாவுக்கு கிடைத்துள்ளது. முதல் இந்த மதிப்பைப் பெற்றவர் திபேத்திய தலைவரான தலாய் லாமா ஆவார்.

வித்தியா பவனின் தலைவரும், மகாராஷ்டிர ஆளுநருமாகிய திரு. சி. சுப்பிரமணியம் ஏப்பிரல் 4-ம் திகதி நடைபெற்ற பவனின் 53-வது வருடாந்த கூட்டத்தில் அன்னை திரேசா பவனின் அழைப்பை ஏற்றுள்ளதாகவும் அதற்கென ஒரு விசேட பட்டமளிப்பு விழா பின்னர் ஏற்பாடு செய்யப்படும் என்றும் கூறினார்.

## இந்தியாவில் தற்கொலைகள் அதிகரிப்பு

அண்மைக் காலத்தில் தற்கொலை செய்துகொள்வோர் தொகை ஏறிக்கொண்டேபோவதாக சர் செய்தி கூறுகின்றது. இந்தியாவில் கடந்த ஆண்டில் சுமார் 60,000 பேர் தற்கொலை செய்துள்ளார். உண்மையான தொகை இதை விட அதிகமாக இருக்கவேண்டும். ஏனெனில் எத்தனையோ தற்கொலைகள் விபத்துகளென மழுப்பப்பட்டு வருகின்றன. பெரும்பாலும் 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்களே இவ்வாறு மரணமாகின்றனர். 1986ஆம் ஆண்டில் 18 வயதுக்குட்பட்ட 7,545பேர் அதாவது 13·9 வீதத்தினர் தற்கொலை செய்ததாகக் கணக்

யௌவனப் பருவத்தில் நிகழும் உணர்ச்சிக் கொந்தளிப்பின்போது ஏற்படும் சம்பவங்களால் பாதிக்கப்பட்டு அதிகமதிகமான இளைஞர் தற்கொலை செய்கிறார்களென உளவியலாளர்கள் கருதுகின்றனர். டாக்டர் எஸ். ஜிட்ஸ்தூர் என்பவர் "பெற்றோர் தங்கள் பிள்ளைகளோடு கூடிய நேரத்தைச் செலவழித்து அவர்களது மனதில் உள்ள குழப்பங்களைப் புரிந்துகொண்டால் எத்தனையோ தற்கொலைகள் நிக

## மேற்கத்திய மறைக்கல்வி முறைகளே தோல்விக்குக் காரணம்

(யூக்கன்)

மேற்கத்திய மறைக்கல்வி முறைகளும், பொருள்களுமே ஜப்பானில் நற்செய்திப்பணி தோல்வியடையக் காரணமா

இவ்வாறு டோக்கியோ நகரின் துணை ஆயரான போல் கசுஹிரோ மோரி கூறியுள்ளார்.

வளர்ந்தோருக்கென சந்திப்பு" (Christian encounter) என்னும் மறைக்கல்வி முறை ஜப்பானில் நற்செய்திப் பணிக்கு உகந்தது என மறைக்கல்வியாளர்கள் கருது

தலாய் லாமா ஆவார்.

வித்தியா பவனின் தலைவரும், மகாராஷ்டிர ஆளுநருமா

பட்டமளிப்பு விழா பின்னர் ஏற்பாடு செய்யப்படும் என்றும் கூறினார்.

தொகை ஏறிக்கொண்டேபோவதாக ச'ர் செய்தி கூறுகின்றது. இந்தியாவில் கடந்த

உண்மையான தொகை இதை விட அதிகமாக இருக்கவேண்டும். ஏனெனில் எத்தனையோ தற்கொலைகள் விபத்துகளென மழுப்பப்பட்டு வருகின்றன. பெரும்பாலும் 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்களே இவ்வாறு மரணமாகின்றனர். 1986ஆம் ஆண்டில் 18 வயதுக்குட்பட்ட 7,545பேர் அதாவது 13·9 வீதத்தினர் தற்கொலை செய்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

மக்கள் தற்கொலை செய்வதற்கு காதலில் தோல்வி, வறுமை, வேலையின்மை, குடும்பப் பிரச்சினைகள், மனவேதனை, கடன் தொல்லை, தீராநோய், சீதனப் பிரச்சினை, குடிவெறி முதலியனதான் பெரும்பாலும் காரணமாகின்றன.

பின்போது ஏற்படும் சம்பவங்களால் பாதிக்கப்பட்டு அதிக மதிகமான இளைஞர் தற்கொலை செய்கிறார்களென உளவியலாளர்கள் கருதுகின்றனர். டாக்டர் எஸ். ஜி ட்ஸ்தூர் என்பவர் ''பெற்றோர் தங்கள் பிள்ளைகளோடு கூடிய நேரத்தைச் செலவழித்து அவர்களது மனதில் உள்ள குழப்பங்களைப் புரிந்துகொண்டால் எத்தனையோ தற்கொலைகள் நிகழாமல் தடுக்கலாம்'' என்று கூறுகிறார்.

நடுத்தர வகுப்பினரிடையேதான் தற்கொலை புரிவோர் தொகை அதிகமாக இருக்கிறது. இந்தியாவில் சமூக அல்லது அரசியல் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கும், தற்கொலை ஒரு வழியாகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

## மேற்கத்திய மறைக்கல்வி முறைகளே தோல்விக்குக் காரணம்

(யூக்கன்)

மேற்கத்திய மறைக்கல்வி முறைகளும், பொருள்களுமே ஜப்பானில் நற்செய்திப்பணி தோல்வியடையக் காரணமாகும் என ஓர் ஜப்பானிய மறைக்கல்வியாளர் குழு கருத்து தெரிவித்துள்ளது.

கடந்த 100 ஆண்டுகளில் அதாவது 300 ஆண்டுகளாக கிறிஸ்தவத்தின்மீது இருந்த தடை நீக்கப்பட்டபின் ஐரோப்பிய அமெரிக்கத் திருச்சபைகள் ஜப்பானில் மறைபரப்புக்காக அளித்த பணமும் ஆளணிகளும் மிகவும் அதிகமாகும். இவ்வளவு தன்னலமற்ற ஆர்வமும், சேவையும் இருந்த போதிலும் ஜப்பானிலுள்ள கத்தோலிக்கரின் தொகை 0.4 வீதமாகவே உள்ளது. ஞானஸ்நானம் பெறும் வளர்ந்தோர் தொகை குறைந்து வருகின்றது. 1963 இல் இத்தொகை 16,669 ஆக இருந்தது. தற்போது 5000 ஆக இருக்கின்றது.

இவ்வாறு டோக்கியோ நகரின் துணை ஆயரான போல் கசுஹிரோ மோரி கூறியுள்ளார்.

வளர்ந்தோருக்கென அமைக்கப்பட்ட ''கிறிஸ்தவ சந்திப்பு'' (Christian encounter) என்னும் மறைக்கல்வி முறை ஜப்பானில் நற்செய்திப் பணிக்கு உகந்தது என மறைக்கல்வியாளர்கள் கருதுகின்றனர்.

## அநாதை இல்லத்தில் குழந்தை விபச்சாரம் பொலிசாரினால் கண்டுபிடிப்பு

(யூக்கன் செய்தி)

இந்தியாவின் மேற்கு மாநிலமாகிய கோவாவில் அநாதை இல்லம் என்னும் பெயரில் ஒரு பர்மியரால் நடத்தப்பட்டு வந்த குழந்தை விபச்சார விடுதியொன்று பொலிசாரினால் கண்டுபிடிக்கப்பட்டது. பெற்றோர் ஒருவரின் முறைப்பாட்டின் பேரில் அவ்விடுதியைச் சோதனையிட்ட பொலிசார் அல்பேட் பீற் என்பவரையும் ஒன்பது சிறுவரையும் கைது செய்ததுடன் அநேக ஆபாசப் படங்களையும், போதைப் பொருள்களையும் கைப்பற்றினர்.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## சின்னப்பர் சபைத் துறவியரின் வேதாகம ஆண்டு

பம்பாயிலுள்ள புனித சின்னப்பர் சபைத் துறவியர் வேதாகமத்தின் அடிப்படையில் ஓராண்டு நிகழ்ச்சிகளை நடத்தவிருக்கின்றனர். 1991 ஆம் ஆண்டில் பவுலீன் சபையினரிடமும், பொதுவாகக் கிறிஸ்தவரிடமும் இறைவார்த்தையின் மட்டில் ஆழ்ந்த அறிவையும் அன்பையும் ஏற்படுத்துவதே இத்திட்டங்களின் நோக்கம்.

பம்பாய் துணை ஆயர் வேர்டினன்ட் பொன்சேகா பவுலீன் துறவற சபைகளின் ஸ்தாபகரான பிதா ஜேம்ஸ் அல்பீரியன் அவர்களின் 107வது பிறந்த தினமான ஏப்ரல் 4 ஆம் திகதி ஒரு திருப்பலியுடன் பம்பாயில் இத்திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இவ்வாண்டில் வேதாகம கருத்தரங்குகள் வேதாகம வாரங்கள், வேதாகமப்போட்டிகள், சித்திரப்போட்டிகள் போன்றவற்றை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம்கருத்து

# உண்மைச் செய்தி

சென்ற மாதம் 12ஆம் திகதி உலக சமூக தொடர்புசாதன தினத்தின் வெள்ளி விழா கொண்டாடப்பட்டபோது திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் அதற்கென வெளியிட்ட செய்தியில் சமூகத் தொடர்பு சாதனங்கள் தனி நபர்களிடையிலும். மனிதகுலத்தினிடையிலும் நெருங்கிய அறிவுமிக்க உறவுகளைக் கட்டி எழுப்புவதற்கு இறையருளால் மனிதனுக்குக் கிடைத்த அற்புதமான கருவிகளாகும் என்றார்.

தொடர்பு சாதனங்களான பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம்' என்பவற்றின் பட்டியல் நீண்டு செய்மதிகள், கணனிகள், வீடியோ ஒளிப் பதிவுக் கருவிகள், செய்திகளை அனுப்புவதில் புதிய முறைகள் போன்ற சமகால சாதனங்கள் அனைத்துமே, பரஸ்பர புரிந்துணர்வு சகோதரத்துவம் ஆகியவற்றில் மக்களை இணைத்து, மனித இலட்சியத்தை நோக்கி முன்னேற உதவ வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

இவற்றின் தயாரிப்பாளர்களும், பாவனையாளர்களும் கவனிக்க வேண்டிய விடயங்கள் பற்றி திருத்தந்தை சுட்டிக்காட்டியுள்ளார். தொடர்பு சாதனங்கள், உண்மை, நீதி, சமாதானம், நல்லெண்ணம், செயலில் அன்பு, பரஸ்பர உதவி, அன்பு, ஐக்கியம் ஆகியவற்றின் வாய்க்காலாகவும், வெளிப்பாடாகவும் இருக்க வேண்டும் என்பதே அவரது வேண்டுகோளாகும்.

தினமும் நாம் பார்க்கின்ற கேட்கின்ற செய்திகள், எந்த அளவுக்கு இப்பண்புகளைக் கொண்டிருக்கின்றன?

தொடர்பு சாதனங்கள் சுதந்திரமாக இயங்க முடிகின்றனவா? உண்மைச் செய்திகளைத் தாங்கி வருகின்றனவா? பக்கச் சார்பற்ற முறையில் நடந்தவைகளாக அவை வெளியிட முடிகின்றதா?

சுதந்தரமாக, உண்மைச் செய்திகளை வெளியிடும் தொடர்புச் சாதனங்கள் அழித்தொழிக்கப்படுகின்றன. பல்வேறு அரசியல் காரணங்களை முன்வைத்து உண்மைகள் மறைக்கப்படுகின்றன.

எமது நாட்டில் நடைபெறும் நிகழ்வுகள் பல்வேறு மட்டத்தில் உள்ளவர்களால் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் விதம் விதமாக விமர்சிக்கப்படுவது நாம் அறிந்த ஒன்று.

அண்டைநாடான இந்தியா 1983 முதல் 1987 வரை இவைபற்றி செய்தி வெளியிட்ட முறைகளும் இந்திய அமைதிப்படை இங்கு வந்தபின் 1989 வரை

## 25வது உலக தொடர்பு சாதனங்கள் தினம்

# திருத்தந்தையின் செய்தி



அன்புச் சகோதர சகோதரிகளே,

இந்த உலக தொடர்புச் சாதனதினத்தைக் கொண்டாடுகையில், சமூகத்தொடர்புச்சாதனங்கள் குறித்து 2 ஆம் வத்திக்கான் சங்கம் வெளியிட்ட தீர்மானத் தொகுப்பை நடைமுறைப்படுத்துவது பற்றி திருத்தந்தை 6 ஆம் சின்னப்பரால் 1971 இல் அங்கீகரிக்கப்பட்ட Communio et progressio என்னும் மேய்ப்புப் பணி அறிவுரையின் பிரதான செய்தியாக அமைந்திருந்த கருத்தை மீண்டும் நோக்குவோம். சங்கப் பிதாக்களின் விருப்பத்திற்கமையத் தயாரிக்கப்பட்ட இந்த அறிவுரையின் படி சமூகத்தொடர்பும் அதற்கான வழிவகைகள் யாவும் மனித குலத்தின் ஒருமைப்பாடும் முன்னேற்றமுமெனக் கருதப்படுகின்றன. முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஏட்டின் இருபதாவது ஆண்டு நிறைவின் போது நான் மீண்டும் இந்த அடிப்படைச் சிந்தனையை எடுக்க விரும்புகிறேன். தொடர்புச்சாதனங்களில், குறிப்பாக சகல மக்களதும் ஒருமைப்பாட்டையும் முன்னேற்றத்தையும் பொறுத்தமட்டில் உள்ள காத்திரமான பிரச்சினைகளையும், தொடர்ந்து வரும் அபிவிருத்திகளால் ஏற்பட்டுள்ள புதிய நல்வாய்ப்புக்களையும் பற்றிச் சிந்திக்குமாறு திருச்சபையின் அங்கத்தவர்களை அழைப்பதே எனது நோக்கம்.

தொடர்புச்சாதனங்கள்

புரிந்துணர்வு சகோதரத்துவம் ஆகியவற்றில் எம்மை நெருக்கமாக ஒன்றிணைப்பதும், இறைவனின் அன்பு மக்களாக மனித இலட்சியத்தை நோக்கி முன்னேற எமக்குத் துணை புரிவதுமாகும்.

இந்தப் பொது ஆய்வுக்கும் இச் சந்தர்ப்பத்தில் நான் அளிக்கவிருக்கும் சிந்தனைக்குமுள்ள தொடர்பு நேரானதும் தெளிவானதுமாகும். இவ்வளவு சக்திவாய்ந்த சாதனங்கள் மனிதனுக்குக் கிடைத்திருக்கும் போது, சம்பந்தப்பட்ட அனைவரும் அவற்றை பயன்படுத்துவதில் உன்னதமான பொறுப்புணர்ச்சியுடையவராக இருத்தல் வேண்டும். 1971 இன் மேய்ப்புப்பணி அறிவுரை கூறுவதுபோல் தொடர்புச்சாதனங்கள் ''உயிரற்ற கருவிகள்'' அவை எமக்குத் தரப்பட்டுள்ளதன் நோக்கத்தைப் பூர்த்தி செய்கின்றனவா இல்லையா என்பது அவற்றைப் பயன்படுத்துவோரின் ஞானத்திலும், பொறுப்புணர்ச்சியிலும் பெரிதும் தங்கியுள்ளது.

கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் தொடர்புச்சாதனங்கள், தனிநபர்களிடையிலும், மனித குலத்தினிடையிலும் நெருங்கிய, அறிவுமிக்க உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கு இறையருளால் மனிதனுக்குக் கிடைத்த அற்புதமான கருவிகளாகும். உண்மையில், தொடர்புச்சாதனங்கள் அபிவிருத்தியடைந்து வருகையிலேயே, மக்கள் ஒருவரையொருவர் இலகுவாக அறிந்து புரிந்து கொண்டு பொதுநலனுக்காக ஒன்றுபட்டு விருப்புடன் உழைக்கத் துணை புரியும் ஒரு புதிய மொழியை உருவாக்கக் கூடியனவாய் இருக்கின்றன. ஆயினும் தொடர்புச்சாதனங்கள் தோழமையையும் உண்மையான மனித முன்னேற்றத்

இருந்தாலென்ன, மிகவும் சக்திவாய்ந்த தொடர்புச்சாதன நிகழ்ச்சிகளின் தயாரிப்பாளராக இருந்தாலென்ன இவ்விடயத்தில் அவர் ஒரு தனிப் பொறுப்புள்ளவராயிருக்கிறார். ஆகவே கொமிசியோ எற் புறோகிறசியோவில் தெளிவாகக் கூறப்பட்டுள்ள கொள்கைகள் வழிகாட்டுதல்கள் பற்றிய தமது அறிவை புதுப்பித்துக் கொள்ளுமாறு திருச்சபையின் மேய்ப்பர்களையும், தொடர்புச்சாதன உலகில் ஈடுபட்டுள்ள கத்தோலிக்க விசுவாசிகளையும் வேண்டுகின்றேன். தமது கடமை எங்குள்ளது என்பதை அனைவரும் நன்குணர்வார்களாக. மனுக்குலத்தின் ஒருமைப்பாட்டுக்கும், முன்னேற்றத்துக்கும் தாம் ஆற்றும் ஓர் அடிப்படை சேவை என்பதை உணர்ந்து இக்கடமைகளை நிறைவேற்ற முனைவார்களாக!

சமுதாயத்திலும், குடும்பத்திலும், தனிநபர்கள் முக்கியமாக குழந்தைகள் இளைஞர்களிடத்திலும் தொடர்புச்சாதனங்களின் செல்வாக்கு பற்றிய உண்மை நிலை குறித்து விசாரணைப் பங்குகளும், நலச்சமூகங்களும் கூடிய கவனம் செலுத்துவதற்கு இருபத்தைந்தாவது உலக தொடர்புச் சாதனதினம் ஒரு சந்தர்ப்பமாக அமையுமென்பது எனது நம்பிக்கை. கொமிசியோ ஏற்புறோகிறெசியோ வெளியிடப்பட்டு இருபது ஆண்டுகளின் பின்னர், தொடர்புச்சாதன முன்னேற்றத்தைப் பற்றி அந்த ஏட்டில் கூறப்பட்ட எச்சரிக்கைகளையும் எதிர்பார்ப்புகளையும் இப்போது முழுமையாக ஏற்றுக் கொள்வது சாத்தியமாகின்றது. ''திடீரென இறைமக்களின் பொறுப்புகள் மிகுதியாக அதிகரிக்கும். இதற்கு முன் அவர்களுக்கு இத்தகைய சந்தர்ப்பங்கள் கிடைத்திருக்காது. தொடர்புச்சாதனங்கள்

படுகின்றன. பல்வேறு அரசியல் காரணங்களை முன் வைத்து உண்மைகள் மறைக்கப்படுகின்றன.

எமது நாட்டில் நடைபெறும் நிகழ்வுகள் பல்வேறு மட்டத்தில் உள்ளவர்களால் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் விதம் விதமாக விமர்சிக்கப்படுவது நாம் அறிந்த ஒன்று.

அண்டைநாடான இந்தியா 1983 முதல் 1987 வரை இவைபற்றி செய்தி வெளியிட்ட முறைகளும் இந்திய அமைதிப்படை இங்கு வந்தபின் 1989 வரை அவர்கள் செய்திகளை வெளியிட்ட விதமும் எம்மால் ஜீரணிக்க முடியாத வேறுபாட்டை வெளிப்படுத்தின.

கொழும்பில் இருந்து வெளிவரும் சிங்கள, ஆங்கிலப்பத்திரிகைகளுக்கும், தமிழ் பத்திரிகைக்கும் இடையிலுள்ள வேறுபாடே வியக்கத்தக்கதாக இருப்பது கண்கூடு. ஏன் யாழ்ப்பாணத்தில் வெளிவரும் பத்திரிகைகள், எல்லாச் செய்திகளையும் வெளியிடுவதுண்டா?

''தொடர்பு சாதனங்கள் மனித இயல்பை வளப்படுத்துகின்றனவா வறுமைப்படுத்துகின்றனவா என்பது தொடர்புசாதன வேலைகளில் ஈடுபட்டுள்ளோரினதும், அவற்றின் செய்தியைப் பெறுவோரினதும் அறிவியல் உள்ளறிவையும் நெறிமுறைப் பொறுப்புணர்ச்சியையும் பொறுத்துள்ளது'' என்கிறார் திருத்தந்தை.

அதிகாரத்தில் உள்ளவர்களை எதிர்த்து, உண்மைக்கு சான்று பகரமுற்பட்ட செய்தியாளர்கள் காணாமல் போகின்ற சமுதாயத்திலே உள்ளறிவால் உண்மையைக் கண்டுகொள்வதும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்வதும் அவசியமும், கடினமுமான காரியமாகும்.

முன்னேற்றத்தையும் பொறுத்தமட்டில் உள்ள காத்திரமான பிரச்சினைகளையும், தொடர்ந்து வரும் அபிவிருத்திகளால் ஏற்பட்டுள்ள புதிய நல்வாய்ப்புக்களையும் பற்றிச் சிந்திக்குமாறு திருச்சபையின் அங்கத்தவர்களை அழைப்பதே எனது நோக்கம்.

தொடர்புச்சாதனங்கள் (பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம்) ''இறைவனின் கொடைகள்'' என்றே திருச்சபை நீண்டகாலமாக கருதி வந்துள்ளது. மேய்ப்புப்பணி அறிவுரை வெளியிடப்பட்ட பின்னரும் தொடர்புச்சாதனங்கள் என்னும் ''கொடைகளின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. செய்மதிகள், கணனிகள், வீடியோ ஒளிப்பதிவு கருவிகள், செய்திகளை அனுப்புவதில் புதிய முறைகள் போன்ற சமகால சாதனங்கள் இன்று மனுக்குலத்தின் உபயோகத்துக்குக் கிடைத்துள்ளன. இப்புதிய கொடைகளின் நோக்கமும் பாரம்பரியமான தொடர்புச்சாதனங்களின் நோக்கமும் ஒன்றுதான்: அதாவது பரஸ்பரயொருவர் இலகுவாக அறிந்து புரிந்து கொண்டு பொதுநலனுக்காக ஒன்றுபட்டு விருப்புடன் உழைக்கத் துணை புரியும் ஒரு புதிய மொழியை உருவாக்கக் கூடியனவாய் இருக்கின்றன. ஆயினும் தொடர்புச்சாதனங்கள் தோழமையையும் உண்மையான மனித முன்னேற்றத்தையும் ஏற்படுத்தக்கூடிய கருவிகளாக விளங்கவேண்டுமென்றால், அவை உண்மை, நீதி, சமாதானம் நல்லெண்ணம், செயலில் அன்பு, பரஸ்பர உதவி, அன்பு ஐக்கியம் ஆகியவற்றின் வாய்க்காலாகவும், வெளிப்பாடாகவும் இருக்கவேண்டும். தொடர்புச் சாதனங்கள் மனித இயல்பை வளம்படுத்துகின்றனவா வறுமைப்படுத்துகின்றனவா என்பது தொடர்புச்சாதன வேலைகளில் ஈடுபட்டுள்ளோரதும், அவற்றின் செய்தியைப் பெறுவோரதும் அறிவியல் உள்ளறிவையும், நெறிமுறைப் பொறுப்புணர்ச்சியையும் பொறுத்துள்ளது.

மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கத்தவரும், அவர் ஓர் எளிய பாவனையாளராக கூறப்பட்ட எச்சரிக்கைகளையும் எதிர்பார்ப்புகளையும் இப்போது முழுமையாக ஏற்றுக் கொள்வது சாத்தியமாகின்றது. ''திடீரென இறைமக்களின் பொறுப்புகள் மிகுதியாக அதிகரிக்கும். இதற்கு முன் அவர்களுக்கு இத்தகைய சந்தர்ப்பங்கள் கிடைத்திருக்காது. தொடர்புச்சாதனங்கள் முழு மனுக்குலத்தினதும் முன்னேற்றத்துக்குத் துணை புரியும்படி செய்வது சாத்தியமாகும்.

மனிதனது சகோதரத்துவத்தை வலுப்படுத்துவதும் சாத்தியமாகும். அப்போது மீட்பரான கிறிஸ்துவுக்குச் சாட்சியாக நற்செய்தி எங்கும் பரப்பப்படலாம்'' அந்த மாபெரும் நம்பிக்கையை, பணியை நிறைவேற்றுவதில் இறைவன் உங்களுக்கு வழிகாட்டித் துணைபுரிய வேண்டுமென்று நான் இறைவனை மனமார வேண்டுகின்றேன்.

வத்திக்கானில் 1991 ஜனவரி 24 ஆம் திகதி புனித பிரான்ஸிஸ் டி சேல்ஸ் திருநாளன்று வெளியிடப்பட்டது.

பாப்பு
2 ஆம் அருள் சின்னப்பர்

**வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள்பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்**

# மறைந்த வைத்தியக் கலாநிதி. J.P.C. பிலிப்ஸ்



அண்மையில் இறையடி சேர்ந்த நம் எல்லோரதும் பெருமதிப்புக்கும் அன்புக்கும் உடையவரான வைத்தியக் கலாநிதி J.P.C. பிலிப்ஸ் என்பவரது மரணம் நம் எல்லோருக்கும் ஈடுசெய்யமுடியாத பெரும் இழப்பாகும். அவரது வாழ்க்கையின் குறிக்கோளை, ஈடுபாட்டைப் பல வாறாக நாம் மதிப்பிடலாம். வைத்தியத் துறையில் விளையாட்டுத் துறையில், சமூகசேவையில், பேராலயப்பங்கில், யாழ் மறைவட்டப் பொதுநிலையினர் கழகத்தில் இன்னும் பல்வேறு துறைகளில் நாம் அவரையும் அவரது அளப்பரிய சேவையையும் நினைவு கூரலாம்.

பேராலயப்பங்கிலே அவரது பணி என்றும் நினைவு கூரப் படக் கூடியதாகும். அத்தோடு யாழ். மறைவட்டப் பொது நிலையினர் கழகத்திலே இவர் ஆற்றிய பணி சிறப்பாகும். இதன் தலைவராக இருந்து செயலாற்றிய காலம் பொற்காலம் என்றே கூறவேண்டும். இப்பணியினை நேர்மையுடனும், சீரிய சிந்தனையுடனும் மேற்கொண்டு கழகத்தின் பெருமைக்கும், சிறப்புக்கும் உரியவரானார். கழகத்தின் புகழையும், ஆய்மையையும் நிலை நாட்டி யாழ். மேற்றிராசனத்துக்குப் பெருமையைத் தேடித்தந்தார். பழுதற்ற, அனுபவம் வாய்ந்த இவரது செயற்திறன் யாழ். ஆயராலும் பல குருக்களாலும் பாராட்டப் பட்டதொன்றாகும்.

தன்னலம் கருதாது, பொது நலம் சிறக்க பெருங் கொடை வள்ளலாய், மற்றோர் அறியாது, மறு கை தெரியாது அள்ளிக் கொடுத்த வித்தகராகும்.

வைத்தியத் துறையிலே வளர்ந்து, உயர்ந்து, சிறந்து விளங்கி, தனியார் வைத்தியத் துறையிலே ஒரு மைல் கல்லாக விளங்கினார். விளையாட்டுத் துறையிலே இவர் ஆற்றிய பணியும், அளித்த ஊக்குவிப்புக்களும் காட்டிய உற்சாகங்களும், நடாத்தியபோட்டிகளும், அள்ளிக் கொடுத்த பரிசில்களும் சொல்லுந்தரமன்று. புனித பத்திரிசியார் கல்லூரியிலே திறமைமிக்க விளையாட்டு வீரனாகத் திகழ்ந்தமையே இதற்கு அடிக்கல்லாகும்.

இன்னும் அவரது பணியானது, புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கத்திலே பேரொளியாகப் பிரகாசித்து, அதன் வளர்ச்சிக்கும், விருத்திக்கும் பல் வேறுபட்ட செயல் திட்டங்களும் மிளிர வழிவகுத்தது. கடைசியாக, அருள் திரு. லோங் அடிகளாரின் முத்திரை வெளியீட்டில் அவரது பணி உச்சக்கட்டமாகும்.

இத்தகைய செயல் வீரரான அமரர் பிலிப்ஸ் அவர்களின் மறைவு ஈடு செய்ய முடியாத, நிரப்பமுடியாத துக்கமிகு நிகழ்வாகும். உத்தம, உன்னத கத்தோலிக்கராக வாழ்ந்து, வாழ்ந்து காட்டி, தனது ஓட்டத்தை முடித்து, வெற்றியின் கிரீடத்தைப் படைத்தோனிடம் பெறுவதற்காகப் பரகதி அடைந்துள்ளார் அவரது இழப்புக்காக வருந்தும் நாம், கண்ணீர் அஞ்சலி செலுத்தும் நாம், அவரது குடும்ப அங்கத்தினர்களுக்கு அநுதாபமும் ஆறுதலும் கூறும் நாம், அவர் இறை ஒளியில், புனிதர்களின் தோழமையில் என்றும் வாழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோமாக!

மே. நார்சிசியஸ்

# தமிழன்னைக்கோர் 'இசைமாலை'

யாழ். திருமறைக் கலா மன்றமானது தன் கலைப் பணியில் பல தரமான தயாரிப்புக்களை தயாரித்தளிக்கின்றது. அதன் ஒவ்வொரு தயாரிப்புமே முன்னைய வெளியீடுகளை விட சகல அம்சங்களிலும் தரமுயர்ந்து காணப்படுவது அதன் சிறப்பியல்பு எனத்துணிந்து கூறலாம். பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்த்து, வியந்து, பாராட்டும் இத்தகைய சிறந்த கலை நிகழ்ச்சிகளை எமது நாளாந்த தினசரிகள் கண்டும் காணாது போன்று இருப்பது மிகவும் விசனத்துக்குரியதாகும்.

கடந்த 25ஆம் 26ஆம் திகதிகளில் அருள் திரு. மரிய சேவியரில் கருவாகி இசைத்தென்றல் திரு. யேசுதாசனின் மிகச் சிறந்த இசையமைப்பில் உருவாகிய ''இசைமாலை'' என்னும் தீந்தமிழ் நிகழ்ச்சியினை புகழாதிருக்க முடியாது. தென்னிந்திய கலைஞர்களின் ஒலியும், ஒளியும் போன்ற சிங்கப்பூர் நிகழ்ச்சிகளின் தரத்திற்கேற்ப நவீன இசைக்கருவிகளுடன், யாழ். குடா நாட்டின் தலைசிறந்த கலைஞர்களின் பின்னணியுடன் சிறப்பான ஒலி, ஒளி அமைப்புடன் இவ் இசைமாலை நிகழ்ச்சி தயாரித்து அளிக்கப்பட்டது. சிறந்த பாடகர்கள், உன்னதமான கருத்தாளம் கொண்ட பாடல்கள், பாடல்களின் கருத்தை எடுத்துக்காட்டும் பின்னணி நடிப்பு இதன் சிறப்பம்சமாகும். கவர்ச்சிகரமான மேடையமைப்பு, இதற்காக திரு. நெல்சன் அவர்களை பெரிதும் பாராட்டலாம். முதல் நாள் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக பங்கு பற்றிய யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. நித்தியராஜ் அவர்கள் தமதுரையில் குறிப்பிட்டுள்ளது போன்று, திருமறைக் கலாமன்றத்தின் இது போன்ற நிகழ்ச்சிகளானது பல் வேறு மனவழுத்தங்களுக்குள்ளாகி இருக்கும் எம்மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமே.

மறுநாள் 26 ஆம் திகதி நடந்தேறிய கிராமிய நிகழ்ச்சி கலை நிகழ்ச்சியாக, பாரம்பரிய இசைக்கருவிகள் கொண்டு நடாத்தப்பட்ட நிகழ்ச்சியாகும்.

இதன் சகல அம்சங்களுமே, தரத்திலும் தயாரிப்பிலும் மிக உயர்ந்தவை. 'காவிய உழவன்' பிரதிபலிக்கப்பட்டது பாரதியாக நடித்தவரின் நடிப்பு தத்துரூபமாக அமைந்திருந்தது மற்றும் சிறுவனின் கரகம், காவடியாட்டம், வயல் பாட்டு, கரவலைப்பாட்டு, வில்லுப் பாட்டுபோன்றஅனைத்து நிகழ்ச்சிகளுமே சிறந்த பின்னணி இசையுடன் மேடையேற்றப்பட்டு மக்களின் பலத்த கரகோசத்தை பெற்றது.

இத்தகைய கலை நிகழ்ச்சிகளை இந்நாட்களில் காண்பது மிகவரிது. இவ்விரு நாட்களிலும் மேடை, ஒலி, ஒளி அமைப்புக்கள் சிறப்பாக விருந்தது. இவ்விருநாட்கள் நிகழ்ச்சிகளுக்கும் பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

திருமறைக் கலாமன்றத்தின் சப்தகானங்கள், மண்ணின் இராகங்கள் வரிசையில் இவ்விரு நிகழ்ச்சிகளும், இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தது போன்றதொன்றாகும்.

''திருமறைக் கலாமன்றத்தின் கலைப்பணி தொடர்க''.

எம். என். நவரெட்ணராஜா
வளன்புரம்

# ''உதய தாரகை'' பாடகர் குழாமின் பத்தாண்டு நிறைவு விழா

யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இறைபணியில் இசைப்பணி ஆற்றிவரும் ஐந்து பாடகர் குழாம்களில் ஒன்றான 'உதய தாரகை (Morning Star) பாடகர் குழாம் மே 12 ஆம் திகதி அதன் பத்தாண்டு காலச்சேவையை முன்னிட்டு நன்றிப்பலியையும் மே 13 அன்று ஆண்டு விழாவினையும்

பிரதம விருந்தினருக்கும், பங்குத் தந்தையருக்கும் மலர் மாலை சூட்டி, மங்கலப் பொட்டிட்டு விழா மண்டபத்துள் அழைத்துச் சென்று மங்கல விளக்கேற்றியபின் இறைவழிபாடு நடைபெற்றது. இதைத் தொடர்ந்து செல்வன் M. சரத் ஜீவன் அனைவரையும் வரவேற்று சிறப்புரை நிகழ்த்தி

சூழ்நிலையில் கூட தனது பணியை ஆற்றத் தவறவில்லை என்பதனையும் கூறினார். அத்தோடு உதயதாரகை பாடகர் குழாமில் மூன்று பெண் அங்கத்தினர்கள் தேவ அழைத்தலைப் பெற்றுள்ளனர் எனவும், அவர்களில் ஒருவரான அருட்சகோதரி மரீனா மரியாம்பிள்ளை திருச்சிலுவை கன்னியர் சபை

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



கிறிஸ்தோப்பர் ஞானப்பிரகாசம்
(சங்கிலித்தாம்)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 01-04-1926 | 15-05-1991 |

நித்தியராகிய யேசுவே ஆத்

யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இறைபணியில் இசைப்பணி ஆற்றிவரும் ஐந்து பாடகர் குழாம்களில் ஒன்றான 'உதய தாரகை (Morning Star) பாடகர் குழாம் மே 12 ஆம் திகதி அதன் பத்தாண்டு காலச்சேவையை முன்னிட்டு நன்றிப்பலியையும் மே 13 அன்று ஆண்டு விழாவினையும் கொண்டாடியது.

12-05-91 அன்று நன்றிப் பலியினை பங்குத் தந்தை அருட்திரு S.H. ஜெபநேசன் அடிகள் ஒப்புக்கொடுத்தார். அவர் தமது மறையுரையில் இக்குழாமின் சேவையை எடுத்துரைத்ததோடு, இவர்களது இசைப்பணி எதிர்வரும் காலங்களிலும் இன்னும் சிரிய முறையில் தொடர இறை ஆசிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

மறுநாள் பி.ப. 3-30 மணிக்குப் பிரதம விருந்தினர் அருட்திரு. ஞானானந்தன் அவர்களின் வருகையுடன் விழா ஆரம்பமானது. உதய தாரகை பாடகர் குழாமின் ஸ்தாபகரான அருட் திரு ஞானானந்தன் அவர்கள் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பிரதம;விருந்தினருக்கும்,பங்குத் தந்தையருக்கும் மலர் மாலை சூட்டி, மங்கலப் பொட்டிட்டு விழா மண்டபத்துள் அழைத்துச் சென்று மங்கல விளக்கேற்றியபின் இறைவழிபாடு நடைபெற்றது. இதைத் தொடர்ந்து செல்வன் M.சரத் ஜீவன் அனைவரையும் வரவேற்று . சிறப்புரை நிகழ்த்தினார். அடுத்ததாக பரத நாட்டியம் இடம்பெற்றது.

பின்னர் செல்வி M.மெலானி பத்து ஆண்டுகளுக்கான அறிக்கையைச் சமர்ப்பித்தார். அவர் பாடகர் குழாமின் ஆரம்பம், அதன் வளர்ச்சி, சேவைகள், பங்குத் தந்தையவர்கள் அளித்த விருந்துபசாரங்கள் அழைத்துச்சென்ற சுற்றுலாக்கள், பழைய அங்கத்தினரின் நிலை என்பன பற்றி எடுத்துரைத்தார்.

அடுத்ததாக கடந்த எட்டு வருடங்களாக இப்பாடகர் குழாமுக்குப் பொறுப்பாக இருந்துவரும் பங்குத் தந்தை அவர்கள் உரையாற்றினார். அவர் தமது உரையில், உதய தாரகை பாடகர்குழாம் கடந்த பத்து ஆண்டுகளாகத் தினமும் இசைப்பணி புரிந்து வருவது பற்றியும், அதுவும் போர்க்கால சூழ்நிலையில் கூட தனது பணியை ஆற்றத் தவறவில்லை என்பதனையும் கூறினார். அத்தோடு உதயதாரகை பாடகர் குழாமில் மூன்று பெண் அங்கத்தினர்கள் தேவ அழைத்தலைப் பெற்றுள்ளனர் எனவும், அவர்களில் ஒருவரான அருட்சகோதரி மரீனா மரியாம்பிள்ளை திருச்சிலுவை கன்னியர் சபையில் சேர்ந்து அருட்சகோதரியாகி உள்ளார் எனவும், செல்வி யூடி இம்மானுவேல் திருக்குடும்பக் கன்னியாகவும், செல்வி அமில் அந்தோனிமுத்து திருச்சிலுவைக் கன்னியாகவும் தம்மை அர்ப்பணித்திருப்பதாக மகிழ்ச்சியோடு கூறினார், அத்தோடு திரு இசை மக்களை இறைவன்பால் ஈர்க்கத் தவறினால் அதுவெறும் பாட்டுக் கச்சேரியாகவே மாறிவிடும் என்றும் அதன் நோக்கத்தையும் தெளிவுற விளக்கினார்.

அடுத்து தனிப்பாடலின்பின் சிறப்புரை செல்வி யமுனா ஞானப்பிரகாசத்தினால்நிகழ்த்தப்பட்டது. அவர் தமது பணியின் சிறப்பையும் மகத்துவத்தையும் குறிப்பிட்டு, இசை மூலம் இசைவேந்தனை பங்கு மக்களின் உள்ளத்தில் உணர்ந்

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

...உதவி அரசாங்க அதிபர் திரு. நித்தியராஜ் அவர்கள் தமதுரையில் குறிப்பிட்டுள்ளது போன்று, திருமறைக் கலா மன்றத்தின் இது போன்ற நிகழ்ச்சிகளானது பல் வேறு மனவழுத்தங்களுக்குள்ளாகி இருக்கும் எம்மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமே.


மறுநாள் 26 ஆம் திகதி நடந்தேறிய கிராமிய நிகழ்ச்சியானது, தமிழர் பண்பாட்டு

---

## நல்லவனாக ! .....

உண்மை உறவின் நண்பன்.
நன்மை நலனின் நண்பன்.
அன்பு அருளின் நண்பன்.
தூய்மை துறவின் நண்பன்.
பொறாமை அழிவின் நண்பன்.
பொல்லாப்பு இருளின் நண்பன்
இச்சை இழிவின் நண்பன்.
கோபம் நரகின் நண்பன்,
நீ உண்மை வழியில்
நன்மை செய்ய,
அன்பு வழியில் அறமே வாழ,
துன்பம் நினைக்கா
நல்மனம் கொண்டு
தூயதை உண்டு
தீயதைவிலக்கி—'நல்லவனாகு'.

எஸ். ஏ. குமார்.
யாழ். புனித மாட்டீனார்
குருமடம்



கிறிஸ்தோப்பர் ஞானப்பிரகாசம்
(சங்கிலித்தாம்)

பிறப்பு 01-04-1926 — இறப்பு 15-05-1991

நித்தியராகிய யேசுவே ஆத்துமங்களை நேசிப்பவரே தேவரீருடைய இரு இருதயமானது பூங்காவனத்திலும், சிலுவையிலும் பட்ட அவஸ்தையையும், தேவரீருடைய மாசில்லாத திருத்தாயார் அனுபவித்த வியாகுலங்களையும் பார்த்து, மரித்த விசுவாசியான திரு கி. ஞானப்பிரகாசம் பேரில் அதிக இரக்கம் வைத்து அவரின் பாவங்களை மன்னித்து, அநித்திய வேதனை நீங்கி உமது நித்திய வாழ்வில் பங் கொள்ளச் செய்தருளும். ஆமென்.

இவரின் ஆன்ம சாந்திக்காக 14-6-91 காலை 6 மணிக்கு கரவை அந்தோனியார் ஆலயத்திலும், 22-6-91 காலை 6 மணிக்கு கரவை பரலோக மாதா ஆலயத்திலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

திருச்சபைச் செய்தியைத் தரும் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வாரப்பத்திரிகை

பாதுகாவலன்
PATHUKAVALAN

# சமய வேற்றுமைகளைத் தவிர்க்கவேண்டும்

—பௌத்த குரு

''இலங்கையில் பின்பற்றப்படும் எல்லா மதங்களுமே வெளிநாடுகளிலிருந்து வந்தவை. ஆகவே சமய வேற்றுமைகள் தவிர்க்கப்பட வேண்டும். சகல சமூகங்களும் ஒரே நாட்டினராக ஒன்று கூட வேண்டும்.''

இவ்வாறு இலங்கைத் தேசிய குருமடத்தில் இயங்கி வரும் சிங்கள கலாச்சாரக் கழகமாகிய கொன்சால்வேஸ் சிங்களக் கழகத்தில் 36 ஆவது ஆண்டு விழாவின்போது உரையாற்றிய வண. நம்புக்கண சித்தார்த்ததேரோ குறிப்பிட்டார்.

மத ஸ்தாபகர்களின் வழி காட்டுதலைப் பின்பற்றுவதனால், சமய வேறுபாடுகளைத் தவிர்க்கும் பரந்த நோக்கு உண்டாகி, மக்கள் பயனுள்ள பிரசைகளாக ஏதுவாகும் என்பதை அவர் வற்புறுத்தினார்.

''சிங்கள கலாச்சாரத்தின் மூலம் நற்செய்தியை மக்களுக்கு அளிப்போம்'' என்பதே அன்று பிதா எட்மண்ட் திலகரத்னவால் ஒப்புக்கொடுக்கப்பட்ட திருப்பலியின் மையக்கருத்தாக இருந்தது.

## கத்தோலிக்க எழுத்தாளரின் மரணம்

பிரபல நாவலாசிரியரான கிறஹம் கிறீன் கடந்த ஏப்ரல் 3ஆம் திகதி சுவிற்சர்லாந்தில் காலமானார் இவரது நெருங்கிய நண்பரான பிதா லியபோல்டோ டுரான் என்பவரால் இவரது இறுதிச் சடங்குகள் நிறைவேற்றப்பட்டு ஜெனீவாவுக்கு அண்மையிலுள்ள மலைச்சாரலில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. இறக்கும் போது அவருக்கு வயது 86. இவர் ஒக்ஸ்வோட் பல்கலைக் கழகத்தில் இருக்கும் போது தமது 'மனைவி மூலம் கத்தோலிக்க சமயத்தை அறிந்து அதைத் தழுவினார். அவர் திருச்சபையின் மீது மிகப் பற்றுதலுள்ளவராய் விளங்கினார்.

உலகப் பிரசித்திபெற்ற நாவலாசிரியரான இவர் நோபல் பரிசுக்குத் தகுதியுள்ளவர் எனப் பாராட்டப்பட்டவர்.

## எருசலேமுக்கு வாருங்கள்

பாலஸ்தீனா, யோர்தான், சைப்பிரஸ் ஆகிய நாடுகளைத் தம் மறைமாவட்டமாகக் கொண்ட லத்தின் பிதாப் பிதாவாகிய பேரருட் திரு. மைக்கல் சபா கிறிஸ்தவ யாத்திரீகர்களை மீண்டும் பாலஸ்தீனாவுக்கு வருமாறு வேண்டியுள்ளார். வளைகுடாப் போர் காரணமாக அங்கு வரும் யாத்திரீகர் தொகை மிகவும் வீழ்ச்சியடைந்திருந்தது.

இப்போது போர் முடிந்துவிட்டாலும், அதன் கேடுகளும், அழிவுகளும், இன்னும் உள்ளன சமாதானத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு நன் மனதுள்ள எல்லா மக்களும் வழிதேடவேண்டும். யாத்திரீகர் இம்முயற்சியில் பங்கு கொள்ள வேண்டும் உடலைப் பொறுத்தமட்டில் அவர்கள் வந்து போகிறவர்களாக இருந்தாலும் ஆன்மிகரீதியில் இம் மறைமாவட்டத்தின் ஒரு நிலையான அம்சமாக இருக்கின்றனர்.

போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளின் புனர்நிர்மாணத்துக்கு அவர்கள் உதவ முடியாவிட்டாலும், அந்நாடுகளின் அறமுறை நிர்மாணத்துக்கும், மக்கள் இதயங்களில் மீண்டும் சமாதானம் ஏற்படவும் இவர்கள் துணை புரியலாம் என அவர் தமது செய்தியில் கூறியுள்ளார்.

## வாக்குகளை ஆய்வுணர்வுடன் பயன்படுத்துமாறு வேண்டுகோள்

(சார் செய்தி)

இந்திய கிறிஸ்தவ சமூகநல சங்கம் இந்திய தேர்தலின் போது கிறிஸ்தவர்கள் தமது வாக்கைப் பயன்படுத்தி நாட்டின் சனநாயக முறையை வலுப்படுத்த வேண்டுமெனக் கோரியுள்ளது. பல பொருளாதார, அரசியல், சமூகப் பிரச்சினைகளை நாடு எதிர்நோக்கியிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் இனவாதக் கட்சிகள் கசப்பையும், குழப்பத்தையும் அதிகரிக்கச் செய்துள்ளதால் பொது மக்கள் குழப்பமும், மனச்சோர்வும் அடைந்துள்ளதாக மேற்படி சங்கங்கள் கூறியுள்ளன.

இத்தகைய சந்தர்ப்பத்தில் கிறிஸ்தவர்கள் சிறுபான்மையினராக இருப்பினும் அவர்கள் முக்கியமான பங்கு வகிக்க வேண்டுமென்றும், ஒவ்வொரு கிறிஸ்தவனும் தான் விரும்பியவருக்கு வாக்களிக்கும் சுதந்திரம் இருந்தபோதும் மதச்சார்பின்மை, சமத்துவம், மனித உரிமைகள், மனித மகத்துவம், பேச்சு, வழிபாட்டுச் சுதந்திரம் ஆகிய கொள்கைகளை ஆதரிக்கும் கட்சிகளுக்கே வாக்களிக்குமாறும் இச்சங்கம் கிறிஸ்தவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளது. இத்தகைய கொள்கைகளை ஆதரிக்கும் கிறிஸ்தவ அபேட்சகர்களுக்கு வாக்களிக்குமாறும் அது கேட்டுள்ளது.

## பொதுநிலையினர் அனுசரித்த தவக்கால நோன்பு

(யூக்கன்)

தென்னிந்திய மறைமாவட்டமாகிய விஜயவாடாவில் 15 பொதுநிலையினர் ஒரு தனித்துவமான தவக்கால நோன்பை அனுசரித்தனர்.

அரச ஊழியர்கள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள் ஆகிய இவர்கள் இறைவனுக்காக இந் நோன்பை அனுசரிக்க முன்வந்தனர்.

விபூதித் திருநாளன்று ஆயர் ஜோசவ் தும்மா அவர்கள் மீது கரம் வைத்துச் செபித்து ஒரு செபமாலையையும், தவத்துக்கு அடையாளமாக ஒரு வெளிர்நீல சால்வையையும் வற்றைத் தவிர்த்தல், நிலத்தில் தலையணையின்றி நித்திரை செய்தல், நாள்தோறும் இரு நற்கிருத்தியங்கள் செய்தல், நாளுக்கு ஒரு வேளை உணவைத் தவிர்த்து அதனைத் தானம் செய்தல் முதலியவற்றை அவர்கள் அனுசரித்தனர்.

அத்துடன் அவர்கள் கிராமங்களுக்குச் சென்று மறைக்கல்விப் போதனை, சிலுவைப் பாதை ஆகியவற்றை நடத்தினர். ஏழைகளுக்கு உணவளித்தனர்.

உயிர்ப்பு விழாவன்று இவர்கள் தமது நோன்பை முடித்துக் கொண்ட போது தமக்குக் கிடைத்த ஆன்மீக நலன்களை உணர்ச்சி பொங்க விவரித்தனர்.

## ஜப்பானில் புதிய சமயங்களுக்கு வரவேற்பு

இவ்வாண்டு நடத்தப்பட்ட ஒரு ஆய்விலிருந்து ஜப்பானின் சனத்தொகையில் பத்திலொன்றுக்கும், ஐந்திலொன்றுக்கும் ஏனையவை பெரிய மதங்களுடன் தொடர்பில்லாதவை. இவைகளால் ஜப்பானிய இளைஞர் பெரிதும் கவரப்படு

## கத்தோலிக்க புத்திஜீவிகள் சான்று பகர வேண்டும்

''கத்தோலிக்க புத்திஜீவிகள் தமது பணியை உணர்ந்து, தமது சிறப்பறிவின் மூலம் கிறிஸ்துவுக்கு சான்று பகர வேண்டும்'' இந்தோனேசிய கத்தோலிக்க புத்திஜீவிகள் சங்கத்தின் நான்காவது மகாநாட்டின் போது ஒரு பாராளுமன்ற உறுப்பினரான டாக்டர் றிபேரு மேற்கண்டவாறு கூறினார். 45 பேர் இம்மகாநாட்டில் கலந்து கொண்டனர். முன்னாள் குருவும் கல்விமானுமாகிய றிபேரு சங்கத்தின் முன்னைய தலைவராவார்.

''கத்தோலிக்க புத்திஜீவிகள் புதிய கருத்துக்கள் சிந்தனைகள் மூலம் நாட்டிற்கும், திருச்சபைக்கும் சேவை செய்யும்படி அழைக்கப்பட்டுள்ளனர். நீதியையும், உண்மையையும் தேடுவதில் அவர்கள் துணிச்சலும் சுறுசுறுப்பும் உள்ளவர்களாய், நற்செய்தியின் ஒளியில் இறைவனின் சித்தத்தைக் காண

## அநாதை...

யார்கள், வர்த்தகர்கள் ஆகிய இவர்கள் இறைவனுக்காக இந் நோன்பை அனுசரிக்க முன் வந்தனர்.

விபூதித் திருநாளன்று ஆயர் ஜோசவ் தும்மா அவர்கள் மீது கரம் வைத்துச் செபித்து ஒரு செபமாலையையும், தவத்துக்கு அடையாளமாக ஒரு வெளிர்நீல சால்வையையும் அளித்தார்.

திருச்சபை நியமித்த தவக் கிருத்தியங்களுடன் இன்னும் 20 விடயங்களை இவர்கள் தாமே தெரிந்து கொண்டனர். வெண்மையான உடை மட்டுமே அணிவது, நாட் பூசை, செபமாலை, வேதாகம வாசகம், வாராந்த பாவசங்கீர்த்தனம் சகல திருவழிபாடுகளிலும் பங்குபற்றுதல், கற்பனைகளை நுட்பமாக அனுசரித்தல், ஒவ்வொருவர் வீட்டிலும் ஒரு முறையாவது கூட்டுப் பிரார்த்தனை, தொலைக் காட்சி, திரைப்படம், மது பானம், புகைத்தல் ஆகிய அனுசரித்தனர்.

அத்துடன் அவர்கள் கிராமங்களுக்குச் சென்று மறைக் களை உணர்ச்சி பொங்க விவரித்தனர்.

## ஜப்பானில் புதிய சமயங்களுக்கு வரவேற்பு

இவ்வாண்டு நடத்தப்பட்ட ஒரு ஆய்விலிருந்து ஜப்பானின் சனத்தொகையில் பத்திலொன்றுக்கும், ஐந்திலொன்றுக்கும் இடைப்பட்டோர் புதிய சமயங்களைப் பின்பற்றுவதாகத் தெரிகிறது.

இவற்றுட் சில பௌத்த மதத்திலும் ஷின்டோமதத்திலும் இருந்து கிளைத்தவை, ஏனையவை பெரிய மதங்களுடன் தொடர்பில்லாதவை. இவைகளால் ஜப்பானிய இளைஞர் பெரிதும் கவரப்படுகின்றனர்.

அதே சமயத்தில் சென்ற நூற்றாண்டிலும் இந் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் தோன்றிய பல மதங்கள் வலிமைகுன்றி வருகின்றன.

## உதய தாரகை ...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

திடச் செய்வதே தமது கடமை எனக் கூறினார். இதனைத் தொடர்ந்து பலே நடனமும் நகைச்சுவை நாடகமும், தாளலயமும் இடம்பெற்றன.

இவற்றையடுத்து பிரதம விருந்தினர் உரையாற்றுகையில், தாம் உருவாக்கிய ஒரு சிறிய சிறுவர்களைக் கொண்டதொரு பாடகர் குழாம் இன்று பெரிய வளர்ச்சியினைக் கண்டதுபற்றி மகிழ்ச்சி அடைவதாகவும், பெரிதும் வியப்படைவதாகவும் கூறினார். பழைய அங்கத்தவர்கள் பற்றியும் எடுத்துரைத்தார்.

இவரது உரையை அடுத்து குழுப்பாடல் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து செல்வன் எம். சக்திஜீவனால் நன்றியுரை நிகழ்த்தப்பட்டது. ஈற்றில் ஒரு சமூக சீர்திருத்த நாடகத்துடன் விழா இனிதே நிறைவெய்தியது.

செல்வி யமுனா ஞானப்பிரகாசம்

### மரண ஞாபக அறிவித்தல்

யூன். 20 திருமதி. ஆரோக்கியம் தேவசகாயம்

(தெல்லிப்பளை கிழக்கு)

2 ஆம் ஆண்டு நினைவுத் திருப்பலி,

சங்கானை, புனித சலேசியார் ஆலயம். மாலை 4 மணி. A/14/91

கத்தின் நான்காவது மகாநாட்டின் போது ஒரு பாராளுமன்ற உறுப்பினரான டாக்டர் றிபேரு மேற்கண்டவாறு கூறினார். 45 பேர் இம்மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

## அநாதை ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோவாவின் கரையோரங்களில் இது போன்ற இன்னும் எத்தனையோ சட்ட விரோதச் செயல்கள் நடந்து வருவதாக சந்தேகிக்கப்படுகிறது. கோவாவுக்கு வரும் பிறநாட்டு உல்லாசப் பிரயாணிகள் இவ்விடங்களை அதிகம் பயன்படுத்துவதாக கோவை விழிப்பு அணி என்னும் இயக்கம் பத்திரிகைச் செய்தியொன்றில் எச்சரித்துள்ளது.

"கத்தோலிக்கப் புத்திஜீவிகள் புதிய கருத்துக்கள் சிந்தனைகள் மூலம் நாட்டிற்கும், திருச்சபைக்கும் சேவை செய்யும்படி அழைக்கப்பட்டுள்ளனர். நீதியையும், உண்மையையும் தேடுவதில் அவர்கள் துணிச்சலும் சுறுசுறுப்பும் உள்ளவர்களாய், நற்செய்தியின் ஒளியில் இறைவனின் சித்தத்தைக் காண முயல வேண்டும்'' என அவர் மேலும் கூறினார்.

## பேராயரின் ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேராயர் தமதுரையில் நீதியான சமாதானத்துக்காக அனைவரும் செபிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

### மரண ஞாபக அறிவித்தல்

யூன். 22

திரு. சத்தியநாதன் டேவிற்

10 ஆம் ஆண்டு நினைவுத்திருப்பலி,

யாழ். பேராலயம், காலை 6 மணி. A/15/91

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1991 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இல. QB/1001/58/81

**உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்**